# HSC 12th Standard

## சிறப்புத்தமிழ்

## மாதிரி வினாத்தாள்-3

காலம் : 2.30 மணி | மதிப்பெண்:90

### பகுதி-I

பின்வரும் வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 20 X 1 = 20

1 ‘உலகம் யாவையும்…’ எனும் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துச்செய்யுள் அமைப்பின் சிறப்பு யாது?

அ.கலிவிருத்தம் ஆ நான்கு அடிகள்

இ.மங்கலச்சொல் தொடக்கம் ஈ. ஈற்றசை ஏகாரம்

2 நெய்தற்கலியின் ஆசிரியர்

அ. பெருங்கடுங்கோ ஆ. இளநாகனார்

இ) நல்லுருத்திரன் ஈ. நல்லந்துவனார்

புறநானூற்றுப் பாக்களின் வகை

அ. வெண்பா ஆ. ஆசிரியப்பா

இ. கலிப்பா ஈ.வஞ்சிப்பா

4 பின்வரும் அடிகளில் பெண்களின் ஒப்பனை வழக்கத்தை வெளிப்படுத்துவது

அ. மாதர் செங்கண் வரிவனப் பதித்து

ஆ. மாதவி மணிமேகலைமுகம் நோக்கி

இ. தாமரை தண்மதி சேர்ந்தது போல

ஈ. காதல் நெஞ்சங் கலங்கிய காரிகை

5. சந்திர மரபினரின் முறையான வரிசை

அ. சந்தனு, விசித்திர வீரியன், பாண்டு, தருமன்

ஆ. விசித்திரவீரியன், சந்தனு, தருமன், பாண்டு

இ. சந்தனு, விசித்திரவீரியன், தருமன், பாண்டு

ஈ. சந்தனு, பாண்டு, விசித்திரவீரியன், தருமன்

6. கீழுள்ள சுரதாவின் பாடலடிகளுள் உருவகம் அமைந்துள்ள அடி

அ. அவர் சொன்ன உவமைகளைத் தொகுப்போமாயில்

ஆ. வெள்ளத்தில் தோன்றியெழும் தண்ணீர் முட்டை

இ. ஆறுபடி நூறுபடியாகும்

ஈ. பாடல் அமைப்போர்க்குப் பல்லவி

7. ஒருலக உணர்விற்கு உரிய செயலைக் குறிக்கும் பாடலடி

அ. தென்னை உயர நதியுண்டு ஆ. மரங்கள் நட்டால் நிழலுண்டு

இ. உறவை விரிவாய்ப் பறக்கவிடு ஈ. கரங்கள் உழைப்பால் உரமேற்று

8. வேந்தர் வேந்தன் ‘மென்மைப் போக்கினை உடைய கவிஞர்’ என உணர்த்தும் மொழியாட்சி கொண்ட அடி

அ. துயருள் அழுக விதிசெய் ஆ. மகளிர் அறிவில் மரமாம்

இ. விதியின் பழமை நகர ஈ. புகழர் புகுக புகுக

9 டாக்டர் உ.வே.சா குறிப்பிடும் அழகிய சிற்றம்பலக்கவிராயரின் மரபினரின் மாவட்டம்

அ. இராமநாதபுரம் ஆ. சிவகங்கை

இ. சேலம் ஈ. புதுக்கோட்டை

10 ஈழத்துப் பேச்சு வழக்கில் ஆகாரம் ஐகாரமாக ஒலிக்கப்படுவதைத் தெரிவிக்கும் சொல்

அ. பானை ஆ. பேனை

இ. தறை ஈ. மளை

11 கீழுள்ளனவற்றுள் பட்டறிவைக் குறிக்கும் சொல்

அ. உசாவல் ஆ. கல்வி

இ. காட்சி ஈ. பாடு

12 <u>நன்றியுணர்வும்</u> மனிதனின் தெய்வம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையாக அமைந்தது – கோடிட்ட தொடர் உணர்த்தும் பொருட்குறிப்பு

அ. தெய்வச் சிந்தனைக்கு நன்றி உணர்வுதான் முதன்மையான காரணம்.

ஆ. தெய்வம் பற்றிய சிந்தனையால் நன்றியுணர்வு தோன்றியது.

இ. நன்றியுணர்வு போன்ற பிறவும் தெய்வம் பற்றிய சிந்தனை தோன்றக் காரணமாயின.

ஈ. எல்லா உணர்வுகளும் நன்றி உணர்வின் அடிப்படையாய்த் தோன்றின.

13 “வன்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்

பெண்மையினால் உண்டென்று

பேசவந்த பெண் அழகே” - எனப் பாரதிதாசன் கூறிய பெண் அழகே மொழிகளிலிருந்து அவரிடம் வெளிப்படுவதாகத் திலகவதி குறிப்பிடும் பண்பு

அ. அழகுணர்வு ஆ. இரக்கம்

இ. துணிவு ஈ. பெருமிதம்

14 சித்த மருத்துவத்திற்குப் பிறிதொரு பெயர்......

அ. ஆயுர்வேதம் ஆ. தமிழ் மருத்துவம்

இ அலோபதி ஈ. யுனானி

15 மாறுபட்ட வகையில் ஆகுபெயர் அமைந்துள்ள வாக்கியம்

அ. மா சுவையாக இருந்தது ஆ. கூட்டம் கலைந்தது

இ. விளக்கு விழுந்தது ஈ. மருக்கொழுந்து வளர்ந்தது

16 பின்வருவனவற்றுள் பலர்பால், வினைமுற்றுச் சொல்

அ. படித்தீர் ஆ. கற்றார்

இ. வரைந்தாய் ஈ. எடுத்தாள்

17 கீழுள்ளனவற்றுள் மாறுபட்ட இடைச்சொல்

அ. கண் ஆ. ஒடு

இ. அது ஈ. இன்

18 இடைச்சொல் வகைகளின் எண்ணிக்கை

அ. 7 ஆ. 8

இ. 9 ஈ.10

19 கீழுள்ளனவற்றுள் ஒட்டணியைக் குறிப்பது

அ. பிறிதுமொழிதலணி ஆ.புகழாப் புகழ்ச்சியணி

இ. வேற்றுமையணி ஈ. தற்குறிப்பேற்ற அணி

20 குறளடி நான்காய் ஒருபொருள் குறித்து ஒரு செய்யுள் மட்டும் வருதல்...

அ. சிந்தடி வஞ்சிப்பா ஆ. அளவடி வஞ்சிப்பா

இ. வஞ்சித்துறை ஈ. வஞ்சித்தாழிசை

## பகுதி II

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 23-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்** **7 X 2 = 14**

21 தீயொழுக்கத்தின் விளைவாக வள்ளுவர் கூறுவது யாது?

22 பாரதியாரின் முப்பெரும் படைப்புகள் யாவை?

23 'எழுமுடி மார்பினெய்திய' – இதனுள் குறிக்கப் பெறுபவர் யார்?

24 'நுங்கு வியாபாரி கோபப்படாமல் சொன்னார்' எனும் பகுதியால் சொல்கேளான் உணர்த்துவது யாது?

25 அழகிய சிற்றம்பலக்கவிராயர் மரபில் பிறந்தவர் படைத்த இலக்கியம் எது?

26 பாரதிதாசன் படைப்புகளின் உள்ளடக்கமாகத் திலகவதி கூறுவன யாவை?

27 அறிவுழைப்புக்குப் பாவலரேறு தரும் வரையறை யாது?

28 ஆபிரகாம் பண்டிதரின் பெற்றோர் யாவர்?

29 பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல்லுக்கு இரண்டு சான்றுகள் தருக.

30 'கார் பெய்தது' – இங்கு, 'கார்' எனும் சொல் பண்பாகுபெயர் எனக் குறிப்பிடப்படுவதன் காரணம் யாது?

## பகுதி – III

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. வினா எண் 33-க்குக் கண்டிப்பாக விடையளிக்க வேண்டும்.** **7 X 3 = 21**

31 கணியன் பூங்குன்றனாரின் புறநானூற்றுச் செய்யுள் வெளிப்படுத்தும் ஓருலகச் சிந்தனையின் முக்கியத்துவம் குறித்த உனது கருத்தை எழுதுக.

32 கண்ணன் தானம் பெற்று மகிழ்ந்த நிலையை விவரிக்க.

33 ஆக்கமும் கேடு மதனால் வரும் – எனக் கூறித் திருவள்ளுவர் அறிவுறுத்துவது யாது?

34 சிறப்பான வாழ்விற்குக் கவிஞர் காவிரிநாடன் கூறும் அறிவுரை யாது?

35 செயல்திறன், செயலறிவு இவற்றைப் பாவலரேறு எங்ஙனம் வேறுபடுத்திக் காட்டுகிறார்?

36 'புதியதோர் உலகு செய்வோம்….' எனப் பாரதிதாசன் பாடுவதற்குரிய பின்னணி பற்றித் திலகவதி கூறுவதை விளக்குக.

37 பிள்ளை- என்னும் சொல் ஈழத்திலும் தமிழகத்திலும் எவ்வாறு மாற்றமடைகின்றது?

38 'இராமன்' என்னும் பெயர் சங்க இலக்கியத்துள் காணப்படுகிற்து. இதனால் அறியப்படுவது யாது?

39 காலவாகுபெயரை விளக்குக.

40 சிறப்பு வினைகளைச் சுட்டுக

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 7 X 5 = 35

41 தோழியின் அறிவு மேன்மையை நெய்தற்கலி வாயிலாக விளக்குக.

(அல்லது)

பண்டைக்காலச் சமுதாய நிலையினை மணிமேகலை மலர்வனம் புக்க காதைச் செய்திகளிலிருந்து விளக்குக.

42 "உலகம் ...." எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல்

"சொல்லுக....." எனத் தொடங்கும் குறளையும், " தவறு...."- என முடியும் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

43 மனத்திட்பத்தின் தேவையைப் பாவலரேறு எவ்வாறு வலியுறுத்துகிறார்?

(அல்லது)

பின்னணிப் பொருள் பொதிந்த நடையினைச் சாலை, சாலினியின் 'ஈழம் வழங்கும் தமிழ்' என்னும் கட்டுரை வழி நின்று விளக்குக.

44 'கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே' – மூதுரையின் இம்மொழிக் கருத்தை விளக்க டாக்டர் உ.வே.சா கூறும் நிகழ்ச்சியினை எடுத்துரைக்கவும்.

(அல்லது)

ஆபிரகாம் பண்டிதரின் செயற்கரிய செயல்கள் பற்றி கட்டுரை ஒன்று எழுதுக.

45 தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

உயிர் வகைகள் குறித்து நன்னூல் வழி விளக்குக.

46 சிலப்பதிகாரத்தின் இலக்கிய வளம் குறித்து கட்டுரை ஒன்று வரைக.

(அல்லது)

இரட்டைக் காப்பியங்கள் பற்றி கட்டுரை ஒன்று வரைக.

47 ‘உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே’ இத்தொடரை விளக்கிக் கட்டுரை ஒன்று வரைக.

(அல்லது)

நும் கல்வித்தகுதிக்கு ஏற்ற பணி வேண்டி உரிய நிறுவனத்திற்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.